# முரசொலி

பக்கங்கள் ஆறு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 112 பிரசோற்பத்தி பங்குனி 05 (18.03 1992) புதன்


பளை ஆஸ்பத்திரி வைத்தியர்

## சொந்தச் செலவில் மருந்துகளை வழங்குகிறார்

பளை ஆஸ்பத்திரியில் மருந்துகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை அடுத்து அங்குள்ள வைத்தியரான அம்பிகைபாகன் தனது சொந்தச் செலவில் தனியாரிடமிருந்து மருந்துகளை வாங்கி நோயாளிகளுக்கு வழங்கிவருகிறார். இந்த ஆஸ்பத்திரியில் கடந்த பல மாதங்களாக மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது, இப்பகுதியில் வேறு இடங்களில் இருந்து இடம் பெயர்ந்த அகதிகள் வாழ்கின்றது குறிப்பிடத்தக்கது. (51)

# மணலாறில் 26 ராணுவத்தினர் பலி

# 3 கனரக வாகனங்கள் தகர்ப்பு!

## முல்லைத்தீவு, கிளிநொச்சி வல்வெட்டித்துறை ஊரடங்கு

முல்லைத்தீவு, கிளிநொச்சி வல்வெட்டித்துறை, வவுனியாவில் நெடுங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிலும் நேற்று முதல் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

இத்தகவலை வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளவே இந்த ஊரடங்கு அமுல் செய்யப்படுவதாக குறிப்பிட்டார்.

● சட்டப்பேரவையில் ஜெயலலிதா

## புலிகளின் ஆதரவாளர்களை ஒடுக்க வேண்டுமாம்!

தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக சிலர் வெளிப்படையாக இயங்குகின்றனர் இவர்களை கண்காணித்து அவர்களது நடவடிக்கைகளை ஒடுக்கவேண்டும் என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று சட்டசபையில் தெரிவித்தார்

தமிழகத்தில் தீவிரவாத நடவடிக்கைகளை ஒடுக்க 40 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஹரியானா மாநிலத்தில் வெடிகுண்டு செயலிழப்பு பயிற்சிகளைமேற்கொண்டுவருவதாகவும் ஜெயலலிதா குறிப்பிட்டார்.

தமிழகத்தில் தடாசட்டத்தின் இதுவரை 128 பேர் கைதாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

● தமிழக சட்டப்பேரவையில்

## திருநாவுக்கரசுவை தடாசட்டத்தில் கைது செய்யக்கோரிக்கை

அண்ணா புரட்சித்தலைவர் தமிழக முன்னேற்றக் கழக சட்டப்பேரவை உறுப்பினர் எஸ். திருநாவுக்கரசை தடா சட்டத்தின் கீழ் கைது செய்யுமாறு நேற்று தமிழக சட்டப்பேரவையில் கோரிக்கை எழுப்பப்பட்டது,

அ. இ, மு. க, உறுப்பினர்களும் காங்கிரஸ் உறுப்பினர்களும் கூட்டாக இக்கோரிக்கையை விடுத்தனர்,

கடந்த சனியன்று எஸ். திருநாவுக்கரசு சட்டப்பேரவையில் புலிகளுக்கு ஆதரவாக பேசியதையும் தமிழ் ஈழம் உருவாக தமிழகம் உதவ வேண்டும் எனக் கூறியதையும் ஆட்சேபித்தே இக்கோரிக்கை நேற்று விடுக்கப்பட்டது.

● இராணுவ நடவடிக்கையால்

## பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் நன்கொடைப்பணம்

யாழ் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கையின் போது இறந்தவர்களினதும், காயப்பட்டவர்களினதும், அங்கவீனமுற்றவர்களுக்கும் நன்கொடைப் பணம் மீண்டும் வழங்கப்படவுள்ளது,

இக்கொடுப்பனவுகளுக்காக புனர்வாழ்வு அமைச்சு பத்து மில்லியன் ரூபாவை யாழ் செயலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

ஆனால் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் மட்டும் தான் மீளக்குடியமர்த்தல் நிவாரணம் மற்றும் புனர்வாழ்வுத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என புனர்வாழ்வு

— 05 ஆம் பக்கம் பார்க்க

## விபத்துக்களைத் தடுப்பதற்கு காவல்துறை அறிவுறுத்தல்

அண்மைக்காலங்களில் பல வாகனவிபத்துக்கள் யாழ் குடா முழுவதும் நடைபெற்று வருகின்றன இதற்கான காரணங்கள், வீதி ஒழுங்கு புரியாமை சிலர் அதனை மீறிச் செல்லல் முக்கியமாக வயது குறைந்தவர்கள் உயரம் காணாததால் எட்டாதவர்கள், சைக்கிள், மோட்டார் சைக்கிள் ஓட்டிச்செல்வதெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யாழ்நகரில் 12 வயதுச் சிறுவன் ஒருவன் 60 வயது மதிக்கத்தக்க வயோதிபரொருவரை ஏற்றிச் சென்று மினிபஸ் ஒன்றுடன் மோதி யாழ். பொதுவைத்தியசாலையில்

... 05ஆம் பக்கம் பார்க்க

## கொக்குத் தொடுவாய் படை மீது புலிகளின் வெற்றிகரத் தாக்குதல்

மணலாறில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய வெற்றிகரமான உக்கிரத்தாக்குதலில் இராணுவத்தினரின் கனரக பீரங்கி ஒன்று உட்பட பல ஆயுதங்களை புலிகள் கைப்பற்றினர், இத்தாக்குதலில் 26 படையினர் பலியானதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்தது. படையினரின் மூன்று கனரக வாகனங்களும் புலிகளால் தகர்த்தெறியப்பட்டன.

நேற்றுக்காலை மணலாறு கொக்குத்தொடுவாய் இராணுவ முகாமிலிருந்து படையினர் பாரிய ஆயுதங்கள் கூடிய கனரகவாகனங்கள் சகிதம் வெளியேறினர்.

இந்த இராணுவ அணியை இடைமறித்து புலிகள் கடும் தாக்குதலை ஆரம்பித்தனர். படையினரின் மூன்று கனரக வாகனங்கள் தகர்த்தெறியப்பட்டன.

கடுமையாக நடந்த இத்தாக்குதலில் படையினர் தரப்பில் 26 படையினர் பலியானதாக கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று மாலை அறிவித்தது.

படையினரிடமிருந்து முதன் முறையாக ஆர். சி எல் என அழைக்கப்படும் 160 எம். எம் பின் உதைப்பற்ற பீரங்கி புலிகளால் கைப்பற்றப்பட்டது. இதைத்தவிர 50 கலிபர் துப்பாக்கியும் மற்றும் 12 துப்பாக்கிகளும் புலிகளால் கைப்பற்றப்பட்டன,

இத்தாக்குதலை ஊர்ஜிதம் செய்த கூட்டுப்படைதலைமையகம் மோதல் 7மணி நேரம் நீடித்ததாகவும் படையினருக்கு விமானப்படையும் கடற்படையும் உதவியளித்ததாகவும் குறிப்பிட்டது.

## பீரங்கி, 50கலிபர், ஏ·கே·எல்·எம்·ஜி. உட்பட நவீன ஆயுதங்கள் மீட்பு

கொக்குத் தொடுவாயில் நடைபெற்ற தாக்குதலில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

- 106எம் எம் பின் உதைப்பற்ற பீரங்கி (R.C.L.) - 01
- இதற்கான ஷெல் - 05
- 50 கலிபர் துப்பாக்கி - 01
- கலிகர் லிங் - 2000
- ஆர். பி, ஜி - 01
- இதற்கான ஷெல் - 03
- ஏ. கே, எல். எம் ஜி - 02
- ரம் மகஸீன் - 02
- லிங் - 90
- 203கைத்துப்பாக்கி - 01
- இதற்கான ஷெல் - 01
- ஜே. ஆர் குண் கென் - 07
- ரீ 81 துப்பாக்கிகள் - 02
- இதற்கான மகஸீன் - 10
- ரி-56 துப்பாக்கிகள் - 07
- இதற்கான மகஸீன் - 28
- ஐ. எம். ரவைகள் - 1000

மற்றும் பல இராணுவ சாதனங்கள்

## பலாலியிலிருந்து இரவு ஷெல் வல்வெட்டித்துறையில் பெண் பலி

பலாலி இராணுவ முகாமிலிருந்து வல்வெட்டித்துறை பகுதியை நோக்கி ஏவப்பட்ட ஆட்லறி ஷெல் தாக்குதலால் குடும்பப்பெண் ஒருவர் பலியானார்

ஊறணி வைத்தியசாலையிலிருந்து வேம்படியில் தனது வீட்டுக்கு மகளுடன் உடுப்

... 6 ஆம் பக்கம் பார்க்க

● கேணல் முனசிங்க தகவல்

## வல்வெட்டித்துறை மீது ஜெட் விமானம் தாக்கியதாம்

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள கடற்புலிகளின் தலைமை அலுவலகம் மீதே நேற்று விமானப்படையினரின் ஜெட் விமானங்கள் மூலம் குண்டுவீச்சுத்தாக்குதல் நடத்தினர் என இராணுவப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க நேற்று தெரிவித்தார்

செய்தியாளரிடையே பேசிய அவர் எனினும் வல்வெட்டித்துறை குண்டுவீச்சு விவரம் ஏதும் இதுவரை கொழும்புக்கு கிடைக்கவில்லை என்றார்

கடந்த 8ஆம் திகதி கோண்டாவில் இராமகிருஷ்ண வீதியில் விமானப்படை நடத்திய குண்டுவீச்சில் 3புலிகள் கொல்லப்பட்டதாக முனசிங்க கூறினார்

இக்குண்டு வீச்சில் மூன்று பொதுமக்கள் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளது தெரிந்ததே

## அன்னைபூபதி நினைவு

இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த அன்னைபூபதியின் நினைவு தினம் நாளை முதல் ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது. இத்தினங்களில் அன்னைபூபதியை நினைவுகூரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு கூறியுள்ளது

## வல்வெட்டித்துறையில் இரவு கடற்படை தாக்கு

வல்வெட்டித்துறைக் கடல் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதேபோல பலாலியிலிருந்தும் வல்வெட்டித்துறை பகுதியை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

ஷெல் அதிர்ச்சியால் நல்லதம்பி தங்கமுத்து (60) என்ற பெண் மரணமானதாக தெரிவிக்கப்படுகிறது. 09

# பத்துத் தினங்கள் முத்தமிழ் விழா
## மரபுவழி, மரபுசாரா நாடகங்களும் மேடையேறும்!

தமிழீழத்தின் பல பாகங்களிலும் தொடர்ச்சியாகப் பத்து நாள்கள் இடம்பெறவிருக்கும் முத்தமிழ் விழாவில் சென்ற வருடத்தைப் போல சிறந்த பல நாடகங்களை மேடையேற்றுவதற்காக நாடகத்துறை சம்பந்தமான விழாக்குழுவினர் அதற்கான முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கோண்டாவிலில் அமைந்துள்ள விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் முத்தமிழ் விழா அலுவலகத்தில் 15, 03, 92 ஞாயிறு காலை ஒன்றுகூடிய நாடகத்துறை சம்பந்தமான குழுவினர், மேடையேறவிருக்கும் நாடகங்கள் பற்றிய சில முடிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

அதன்படி மேடையேற்றப்படவிருக்கும் நாடகங்கள் மரபுவழி நாடகங்கள், மரபுவழி சாராத நாடகங்கள் என இரு பிரிவாக வகைப்படுத்தப்பட்டுள்ளன

கூத்து, விலாசம் போன்றவை மரபுவழி நாடகங்கள் என்ற பிரிவில் இடம்பெற்றுள்ளன,

மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆடப்பட்டு வரும் வடமோடி, தென்மோடி கூத்து வகைகளும்; மன்னார் பிரதேசத்தில் ஆடப்பட்டு வருகின்ற மாதோட்டப்பாங்கு. வடபாங்கு என்பனவும்; வன்னிப் பிரதேசங்களின் கோவலன் கூத்து, காத்தவராயன் கூத்து ஆகியனவும்; காமன் கூத்து, அருச்சுனன் தபசு ஆகிய மலையகத்தின் பாரம்பரிய கலை நிகழ்வுகளும்; யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஆடப்பட்டு வருகின்ற வடமோடி. தென்மோடி, காத்தவராயன், மற்றும் இசை நாடகங்கள் ஆகியனவும் மரபுவழி நாடகங்கள் பிரிவில் இடம் பெறலாமெனவும்; மரபுவழி சாராத நாடகங்கள் பிரிவில் சரித்திரப் பாங்கான நாடகங்களும், சமூகப்பாங்கான நாடகங்களும் இடம்பெற வேண்டுமென நாடகக்குழுவினர் அறிவித்துள்ளனர்

மேடையேற்றப்படவுள்ள நாடகங்கள் ஒரு மணி நேரத்திற்குள் இடம்பெறக் கூடிய விதத்தில் ஆக்கப்படுதல் வேண்டும் நாட்டிய நாடகங்களை 45 நிமிட நேரத்திற்குள் இடம் பெறக்கூடிய விதத்தில் ஆக்கப்படலாம்.

முத்தமிழ் விழாவில் தத்தம் நாடகங்களை மேடையேற்ற விரும்பும் நாடகத்துறை சார்ந்த கலைஞர்கள், மன்றங்கள் நாடக எழுத்துப் பிரதிகளை 'முத்தமிழ் விழாப் பொறுப்பாளர்', விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம், தலைமைச்செயலகம், கோண்டாவில், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 15. 04 1992க்குப்பிந்தாமல் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

### மெய்வல்லுநர் போட்டி

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக மைதானத்தில் அதிபர் சைவப்புலவர் நா. க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது (18)

### தமிழிசை அரங்கு

இந்து சமய இராஜாங்க அமைச்சு நடத்தும் நான்காவது தமிழிசை அரங்கு இன்று மாலை 6 மணிக்கு வெள்ளவத்தை ஸ்ரீ இராமகிருஷ்ண மண்டபத்தில் தேவார திருவாசக விழாவாக நடைபெறவுள்ளது.

# தங்கப்பாளங்களை கண்டெடுத்தாராம் மார்க்கோஸ்

தனது கணவர் பெருஞ்சொத்துப் பெற்றது பற்றிய புகாரை மறுத்த பிலிப்பைன்ஸின் முன்னாள் ஜனாதிபதி மார்க்கோஸின் மனைவி இமெல்டா 'ஜப்பானியப்படைகளு'க்கு எதிராக இரண்டாம் உலகப்போரில் தனது கணவர் போரிட்டபோது தங்கப்பாளங்களைக் கண்டெடுத்ததாகவும் அவற்றில் சிலவற்றைத் தனது சகாக்கள் சிலருக்கும் கொடுத்ததாகவும் செய்தியாளரிடம் தெரிவித்தார் மார்க்கோஸ் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அரசுக்குச் சொந்தமான 500 கோடி ரூபாவை மோசடி செய்ததாக இமெல்டாவுக்கு எதிராக 54 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை தெரிந்ததே. 47

# மனித உரிமை மீறல் மனு உயர்நீதிமன்றம் விசாரிக்கும்

அடிப்படை மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக டாக்டர் நிஹால் ஜயசேகர (?) உவால் குணசிங்க என்பவர் வழக்கு தாக்கல் செய்வதற்கு உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது

டாக்டர் குணசிங்க உயர் நீதிமன்றுக்குச் செய்த மனுவில் தன்னை மார்பு சிகிச்சை வைத்தியராக நியமிக்கவில்லையெனவும் தனக்குப் பதிலாக டாக்டர் ஸ்ரீயனி என்பவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்

இவ் வழக்கு விசாரணை மே மாதம் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது

# அணு ஆயுதங்கள் மாற்றம் இடை நிறுத்தப்பட்டது

அணு ஆயுதங்களை ரஷ்யக் குடியரசுக்கு மாற்றுவதை உக்ரெனியக்குடியரசு இடை நிறுத்தம் செய்துள்ளது.

இதை அறிவித்த உக்ரெனிய ஜனாதிபதி, ரஷ்ய குடியரசு இந்த ஆயுதங்களை முற்று முழுதாக அழிக்கும் என்ற உத்தரவாதம் இல்லாதபடியால் உக்ரெனிய அரசு எவ்வித பொறுப்பும் ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லையெனவும் இதை மேற்குலக நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் கூறினார்

அணு ஆயுதங்கள் அற்ற நாடாகவே உக்ரெய்ன் இருக்க விரும்புவதாக அறிவித்த ஜனாதிபதி 1994க்கு முன் அனைத்து அணு ஆயுதங்களும் அகற்றப்படும் என உறுதி அளித்தார்.

# கொள்ளைகளுக்கு தலைமைதாங்கிய பொலிஸ் அதிகாரி மாகோவில் கைது!

கொள்ளைச் சம்பவங்கள் பலவற்றிற்கு சூத்திரதாரியாக விளங்கியவர் எனக் கருதப்படும் பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் சேவையிலிருக்கும் போதே இந்த அதிகாரி பல கொள்ளைச் சம்பவங்களுக்குத் தலைமை தாங்கியுள்ளமை ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது

அண்மையில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவம் ஒன்றில் இந்தப் பொலிஸ் அதிகாரி அடையாளம் காணப்பட்டதையடுத்தே இவரைக் கைது செய்யமுடிந்ததாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மாகோ பொலிஸார் இவரைக் கைது செய்து மேலதிக விசாரணைக்காக கொழும்புக்கு அனுப்பியுள்ளனர்.

### குரக்கன் பாண்; நல்ல கிராக்கி

விவசாயிகளின் உப உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக மாவிட்டபுரம் பகுதி பேக்கரிகளில் குரக்கன் மாவில் செய்யப்பட்ட பாண் பொதுமக்களுக்கு ஒட்டுக்கு விற்பனை செய்யப்படுகிறது

இப் பகுதியில் இதற்கு நல்ல வரவேற்பு இருப்பதுடன் பலர் இப் பாணை விரும்பி வாங்குவதை அவதானிக்க முடிகிறது

### நினைவுக் கூட்டம்

அமரர் கே. டானியலின் 6 ஆவது நினைவுக் கூட்டம் நல்லூர் கம்பன் கோட்டத்தில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பத்து மணிக்கு நடைபெறவுள்ளது.

டொமினிக் ஜீவா வரவேற்புரை நிகழ்த்துவார்.

பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம், பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் நினைவுரைகள் நிகழ்த்துவர்.

தெணியான் நன்றியுரை நிகழ்த்துவார்,

# அக்டோபர் முதலாம் திகதி முதியோர் தினமாகப் பிரகடனம்

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் பார்வை முதியோர் மீது திரும்பியுள்ளது அதன் பயனாக அச்சபை ஓர் தீர்மானத்தையும் நிறைவேற்றியுள்ளது உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் முதலாம் திகதியை முதியோர் தினமாக அனுஷ்டிக்க வேண்டும் என்று அத் தீர்மானம் கூறுகிறது.

மேலை நாடுகளில் முதியோர் அவர்களின் வாரிசுகளால் முறையாக பராமரிக்கப்படாமல் அல்லல் படுகின்றனர், அதனால் இளைய சந்ததியினரின் கவனத்தை அவர்கள்பால் ஈர்க்கும் நோக்குடனேயே இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

# ஆட்கடத்தல் சம்பவங்களில் அரசியல்வாதிகளுக்கும் சம்பந்தம்?

டில்லியில் தற்போது அடிக்கடி ஆட்கடத்தல்கள் இடம் பெற்று வருகின்றன

பெரும் வணிகசாரர்களைக் கடத்திச் சென்று பல லட்சக்கணக்கான ரூபாய்களைப் பணயமாகக்கேட்கும் சம்பவங்கள் அங்கு அடிக்கடி நடைபெற்று வருகின்றன

அவர்களும் உயிருக்குப் பயந்து கடத்தல்காரர்கள் கேட்கும் தொகையைக் கொடுத்துவிட்டு வந்து விடுகின்றனராம்.

இதில் இந்தியாவின் பிரபல அரசியல்வாதிகளுக்கும் தொடர்பு இருப்பதாக பலர் சந்தேகிக்கிறார்கள். (22(

# கணக்காளர் நாயகத்துடனான வங்கி உறவில் பாதிப்பு

கணக்காளர் நாயகத்துக்கும் இலங்கை மத்திய வங்கிக்குமிடையே இழுபறிநிலை ஒன்று உருவாகியுள்ளதாக அரசு சார்புப் பத்திரிகையான 'டெய்லி நியூஸ்' தெரிவித்துள்ளது.

மத்தியவங்கியினால் கடைப் பிடிக்கப்படும் விதிமுறைக்கு முரணான சில நடைமுறைகள் தொடர்பாகவே இந்தக் கருத்துவேறுபாடு தோன்றியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# உலகக் கிண்ண கிரிக்கெட்: 'முரசொலி' வினாவிடை போட்டி

தற்பொழுது நடைபெற்று வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர்பாக வாசகர்களுக்கான போட்டியொன்றை நடத்த முரசொலி முன்வந்துள்ளது.

கீழே தரப்படும் வினாக்களுக்கு விடையளிப்பதன் மூலம் நீங்களும் இப் போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

போட்டிக்கான வினாக்கள் இவைதான்:—

(1) ஐந்தாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் முதலாவது இடத்தைப் பெறப்போகும் நாடு எது?

(2) இரண்டாவது இடத்தைப் பெறப்போகும் நாடு எது?

(3) இத் தொடரில் சிறந்த வீரருக்கான பரிசைப் பெறப்போவது யார்?

(4) இறுதிப் போட்டியில் சிறந்த வீரருக்கான பரிசைப் பெறப்போவது யார்?

(5) முதலாவது உலகக் கிண்ணப் போட்டி
(அ) எங்கு நடைபெற்றது?
(ஆ) எப்பொழுது நடைபெற்றது?

* இப் போட்டியில் முரசொலியில் கடமையாற்றுபவர்களைத் தவிர்ந்த எவரும் பங்குபற்றலாம்
* விடைகள் யாவும் முரசொலியில் பிரசுரமாகும் படிவங்களிலேயே அனுப்பப்படவேண்டும்,
* ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம். ஆனால் கீழ்வரும் படிவத்தில் மட்டுமே அனுப்பப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு:- | ரூபா. | 250 |
| இரண்டாம் ,, | ,, | 150 |
| மூன்றாம் ,, | ,, | 100 |

விடைகள் இம்மாதம் 23 ஆம் திகதிக்கு பிந்தாமல் முரசொலிக்கு நேர்முகமாகவோ அல்லது தபால் மூலமோ சேர்ப்பிக்கப்பட வேண்டும். கடித உறையில் "உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி" எனக் குறிப்பிட வேண்டும்.

குறிப்பு:- சரியான விடைகள் பல கிடைக்குமிடத்து குலுக்கல் முறையில் பரிசில்கள் தீர்மானிக்கப்படும்.

## உலகக் கிண்ண கிரிக்கெட் முரசொலி வினாவிடைப் போட்டி

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

மாணவராயின் பாடசாலையின் பெயர்: ..............................

விளையாட்டுக் கழக அங்கத்தவராயின் கழகப் பெயர்; ..............................

.................... ....................

திகதி கையொப்பம்

நல்லூர் கிளை நூலகம் மாநகரசபை யாழ்ப்பாணம்

★ கடந்த பொதுத் தேர்தல் பற்றி தற்பொழுது எழும் பெரும் சர்ச்சை

# கண்காணிக்க வந்தவர்கள் கடமையில் தவறினர் - தினேஷ்

# நீதியான தேர்தல் உடன் நடத்தப்படவேண்டும் - வாசுதேவ

1989 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல் பற்றி கடந்தவாரம் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா வெளியிட்ட அறிக்கை தெற்கில் பலத்த வாதத்தையும் சர்ச்சையையும் அரசியல் வட்டாரங்களில் ஏற்படுத்தியுள்ளது.

தேர்தல் ஆணையாளரின் அறிக்கைபற்றி ஆராய ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்படவேண்டுமென்று கூறும் அதேவேளை பிரதான எதிர்க்கட்சிகள் முழுமையான பாராளுமன்ற விவாதம் ஒன்றைக் கோரியுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்க, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் இது தொடர்பாக பாராளுமன்ற விவாதத்தைக் கோரியுள்ளனர்.

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன சர்வதேச பார்வையாளர்கள் சுற்றுலாப் பயணிகள் போலவேட்டுத் தமது பொதுத் தேர்தல் கண்காணிப்பில் பங்குபற்றியிருக்கிறார்கள் எனக் குற்றம் சாட்டியுள்ளார்.

லிபரல் கட்சித் தலைவர் சானக அமரதுங்கவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். அஷ்ரப்பும் முன்னுரிமை வாக்களிப்பு முறை நீக்கப்பட வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

சானக அமரதுங்கவும், காமினி திசநாயக்காவும் ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு முறையை அமுல்படுத்துமாறும்கோரியுள்ளனர்.

ஆனால் நவசமசமாஜக் கட்சித் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்காரவோ 1989 பொதுத்தேர்தல் நடத்தப்பட்ட விதம்பற்றி தேர்தல் ஆணையாளரே அதிருப்தி தெரிவித்துள்ளதனால் உடனடியாக சுதந்திரமான நியாயமான புதியதோர் தேர்தல் நடத்தப்படவேண்டுமென வற்புறுத்தியுள்ளார்.

# மொழித்தேர்ச்சி இன்மையால் இளைப்பாறியோருக்கு

## சம்பள உயர்ச்சி நிலுவைகள் கிடையாது

சிங்கள மொழித் தேர்ச்சி பெறாத காரணத்தினால் சம்பள உயர்வுகளைப்பெறாத நிலையில் இளைப்பாறிய ஒருவர் தமது சம்பள உயர்வுகளைப் பெற உரித்துடையவர் அல்லர் எனப் பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கை மூலம் (இல 37/91) தற்போது அறிவித்துள்ளது.

சிங்கள மொழித் தேர்ச்சி பெறாத காரணத்தால் 20 சம்பள உயர்வுகளைப் பெறாத நிலையில் 1987இல் இளைப்பாறிய ஒருவர் தமது சம்பள உயர்வுகளை மீள வழங்கமுடியுமா என எழுப்பிய கேள்விக்கு பொது நிர்வாக அமைச்சின் பிரதி தாபனப் பணிப்பாளர் பதிலளிக்கையிலேயே மேற்படி சுற்றறிக்கையின்படி அந்த நிலுவைகளைப்பெற அவர் உரித்துடையவர் அல்லர் எனத் தெரிவித்துள்ளார்.

# பாவனைக்கு உதவாத ரின் மீன் இறக்குமதிக்குத் தடை

ரின்மீன் இறக்குமதியில் கூடிய அளவு கண்காணிப்பைச் செலுத்துமாறு வர்த்தக வாணிபத்துறை அதிகாரிகள் பணிக்கப்பட்டுள்ளனர்.

பாவனைக்கு உதவாத ரின் மீன்கள் வர்த்தக நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்பட்டு வருவதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சில வர்த்தக நிறுவனங்களால் பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்ட பாவனைக்கு உதவாத ரின் மீன்களை சந்தைப்படுத்துவதற்கு வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் தடைவிதித்துள்ளார்.

# சென் நீக்கலஸ் வெற்றிபெற்றது

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினரால் நடத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் மருத்துவபீட பல்கலைக்கழக மைதானத்தில் நாவாந்துறை சென் நீக்கலஸ் அணிக்கும் கலைவாணி அணிக்கும் இடையில் இடம்பெற்ற போட்டியில் சென் நீக்கிலஸ் அணி 3:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றியீட்டியது. (16)

# வவுனியா - திருமலை பஸ் சேவை ஆரம்பம்!

வவுனியாவுக்கும் திருமலைக்கும் இடையேயான போக்குவரத்துச் சபை பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தாண்டிக்குளத்திலிருந்து தினமும் காலை 10 மணிக்கு இந்த பஸ் புறப்பட்டு பிற்பகல் 4 மணிக்கு திருமலையைச் சென்றடையும்.

பன்குளம் வழியாக செல்லும் இச் சேவைக்கு ஒற்றைக் கட்டணமாக 25 ரூபா அறவிடப்படுகிறது.

திருமலையிலிருந்து காலை 8.30மணிக்கு புறப்படும் இந்த பஸ் பகல் 2 மணிக்கு வவுனியாவை வந்தடையும். வவுனியா டிப்போ இச் சேவையை நடத்துகிறது.

# பர்மிய விவகாரம்; புஷ்ஷை

# நெருக்குகிறது அமெரிக்க செனட்!

பர்மிய இராணுவ அரசாங்கத்துக்கு எதிராகப் புஷ் நிர்வாகம் கடுமையாகச் செயற்படும்வரை அந் நாட்டுக்கான அமெரிக்கத் தூதரின் நியமனத்தை நிறுத்திவைக்க செனட் வெளியுறவுக் கமிட்டி ஏகமனதாக முடிவுசெய்தது.

திரு. பார்க்கர் போர்க் அமெரிக்கத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால் வெளியுறவுக் கமிட்டி இந்நியமனம் குறித்து இறுதி முடிவு மேற்கொள்வதில்லை எனத் தீர்மானித்துள்ளது.

பர்மிய இராணுவ அரசாங்கம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என புஷ் அறிக்கை வெளியிடும் வரை தூதர் நியமனத்தை அங்கீகரிப்பதில்லை எனக் கமிட்டி தீர்மானித்துள்ளது.

அதிகாரங்களைச் சிவிலியன்களிடம் மாற்றிக்கொடுப்பதுடன் நோபல் பரிசு பெற்ற ஆங் சான் சூகியை விடுதலை செய்யுமாறும் அமெரிக்கா கோரவேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

ரங்கூனிலுள்ள அமெரிக்கத் தூதரக இராணுவ அதிகாரிகளை உடனடியாக வாபஸ் பெறவேண்டும். பர்மாவுடன் சகல உத்தியோக பூர்வ தொடர்புகளையும் நிறுத்த வேண்டும், பர்மாவுக்கு எதிரான ஐ. நா தடையை அமெரிக்கா ஆதரிப்பதுடன் பர்மாவுக்கு ஐ. நா. அபிவிருத்தி நிதி வழங்குவதையும் எதிர்க்க வேண்டும் என்றும் கமிட்டி நிபந்தனை விதித்துள்ளது.

# உடமைகள் எரிந்து நாசம்

தம்புள்ள பகுதியில் உள்ள தேவகுவ என்ற பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அகதி முகாமில் நேற்று முன்தினம் நண்பகல் திடீரென தீப்பற்றிக் கொண்டதாக அறிவிக்கப்படுகின்றது.

இத் தீயினால் அம்முகாமிலிருந்த உடமைகள் நாசமாகின. குழந்தை ஒன்று காயத்திற்குள்ளானது.

தேவகுவ அகதி முகாமில் முஸ்லிம்கள் தங்கியுள்ளனர்.

# சாரணர் சபைக்கு எதிராக நஷ்டஈடு கோரி வழக்கு!

ஸ்ரீலங்கா சாரணர் சபைக்கெதிராக ஒன்பது இலட்சம் ரூபா நஷ்டஈடு கோரி கொழும்பு மேலதிக மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் மாவட்ட நீதிபதி பிரதிவாதியான ஸ்ரீலங்கா சாரணர் சபைக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளார்.

இந்த வழக்கை தாக்கல் செய்த மனுதாரர் திரு எச். எம். ஏ. பீரிஸ் மருதானையில் உள்ள வீட்டில் 1948 இல் இருந்து தனது பெற்றோர் வசித்துவந்ததாகவும் 1970 இல் இந்த வீடு சாரணர் சபைக்கு நன்கொடையாக அளிக்கப்பட்ட பின்பும்தான் தொடர்ந்தும் அங்கு வசித்து வந்ததாகவும் குறிப்பிட்டார்.

தான் வீட்டில் இல்லாத நாள்களில் பிரதிவாதி வீட்டை தகர்த்துத் தரைமட்டமாக்கி விட்டதாகவும் இதற்காக ஒன்பது இலட்சம் ரூபாவை நஷ்டஈடாகப் பெற்றுத் தருமாறும் பீரிஸ் நீதிமன்றைக் கோரியுள்ளார்.

# 500 பக்கங்களைக் கொண்டதாக யாழ். இராச்சிய வரலாறு

'யாழ்ப்பாண இராச்சியம்' என்ற வரலாற்று நூல் ஒன்றை யாழ் பல்கலைக்கழகம் விரைவில் வெளியிடவுள்ளது.

யாழ் இராச்சியம் 13 ஆம் நூற்றாண்டில் தொடங்கி போத்துக்கேசர் வருகையுடன் முடிவுற்றதாகவே தென்பகுதி வரலாற்று ஆசிரியர்கள் சொல்லி வந்ததுண்டு.

ஆனால் அந்த யாழ் இராச்சியம் தோன்றுவதற்கு முன்பிருந்த பிரதேச நிலை என்ன என்பதற்கு ஆதாரத்துடன் விளக்கமளிப்பதாக 'யாழ்ப்பாண இராச்சியம்' வரலாற்று நூல் அமைந்துள்ளதாக நூலின் பதிப்பாசிரியர் தெரிவித்தார்.

சுமார் 500 பக்கங்களைக் கொண்டதாக இந் நூல் அமைந்துள்ளது

# சைப்பிரஸில் யுவதிகள் அவலம்;

## காரணமான சிங்கள நடிகை கைது!

சைப்பிரஸ்நாட்டில் வேலை பெற்றுத் தருவதாக இலங்கை யுவதிகளைஏமாற்றி அவர்களை அங்கு அழைத்துச் சென்று ஹோட்டல்களில் நிர்வாண நடனமாடவைத்ததாகக் கூறப்படும் பிரபல சிங்கள திரைப்பட நடிகை ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் சைப்பிரஸுக்கு அனுப்பி வைத்ததாகக் கூறப்படும் யுவதியொருவர் இலங்கைக்குத் திரும்பி வந்து அங்கு தமக்கு நடந்தவைகளைப் பற்றி புகார் செய்ததையடுத்தே இந்த நடிகையின் குட்டு அம்பலமாகியுள்ளது.

நடிகையின் கணவர் இது தொடர்பாக கைது செய்யப்பட்டு விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

## ஆர்ச். சூசையப்பர் உற்சவம்

புலோலி ஆர்ச். சூசையப்பர் தேவாலய வருடாந்த உற்சவம் கடந்த 10ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது. இன்று 18ஆம் திகதி பி.ப 3 மணிக்கு ஆர்ச். சூசையப்பர் திருச்சொரூப சுற்றுப் பவனி இடம்பெறும் நாளை காலை நடைபெறும் திருநாள் ஆராதனையுடன் ஆலய வருடாந்த உற்சவம் முடிவடையும். (11)

# கொண்டைக்கிளியைக் கூண்டிலடைத்து கோடீஸ்வரராகும் நவீன கடத்தற்காரர்கள்

அவுஸ்திரேலியாவில் பிறந்த பறவைகளுக்கு அமெரிக்க, ஐரோப்பிய சந்தைகளில் பெரும் கிராக்கி இருக்கிறது. அவற்றை டொலர் கணக்கில் பணம் கொடுத்து வாங்கவும் இந்த நாடுகளில் போட்டி நிலவுகிறது.

கடத்தல் பறவை விற்பனைக்குப் பெயர்போன ஒரு மத்திய நிலையமாக பெல்ஜியம் விளங்குகிறது. ஒரு ஜோடி கொண்டைக் கிளிகளை 20 ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கு இங்கு விற்பனை செய்ய முடியும்.

தொழில் ரீதியில் கடத்தலில் ஈடுபட்டுள்ள ஒருவர் சிட்னி விமான நிலையத்தில் சோதனைக்குட்படுத்தப்பட்டபோது அவரிடம் 26 அவுஸ்திரேலியக் கிளிகள் இருந்தன. அரிதாகக் காணப்படும் கிளிகள் பலவும் இவரிடமிருந்து கைப்பற்றப்பட்டன

வெளிநாடுகளில் சுமார் 250,000 அமெரிக்க டொலர்களுக்கு இந்த கொண்டைக் கிளிகளை விற்பனை செய்ய முடியும். கூடுகளில் அடைத்து வைத்து வளர்ப்பதில் அவுஸ்திரேலியக் கிளிகளே மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகின்றன. இதனால் அமெரிக்கா அவுஸ்திரேலியக் கிளிகளைக் கொள்வனவு செய்வதில் அதிக நாட்டம் காட்டுகிறது. முட்டைக்கடத்தலும் இதனால் அதிகரித்த வண்ணமுள்ளது.

கொண்டைக்கிளிகளில் ஒருவகை கறுப்பு நிறக்கொண்டைக் கிளிகளும் காணப்படுகின்றன.

போதைப்பொருள் ஊசிபோட்டுக் கடத்தப்படும் பறவைகள் திடீரென விழித்துக் கொண்டால் தாம் அடைத்து வைக்கப்பட்டுள்ள பெட்டிகளுக்குள்ளேயே ஏனைய பறவைகளுடன் சண்டையிட ஆரம்பிக்கின்றன. இதனால் சண்டை பலத்து பல பறவைகள் உயிரிழந்தும் விடுகின்றன

இந்தப் பறவைக் கடத்தல் நடவடிக்கை அவுஸ்திரேலியாவுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளது. கடத்தலில் ஈடுபடுவோருக்கு கடும் தண்டனை வழங்க அவுஸ்திரேலிய அரசாங்கம் இப்போது திட்டம் தீட்டியுள்ளது.

★ தென்னாபிரிக்காவில் நேற்று நடைபெற்ற

# கருத்துக் கணிப்புத் தோற்றால்

# பொருளாதாரத்தடை அமுலாகலாம்

பிரசார இயக்கத்தின்போது வன்செயல்கள் பெருமளவில் வெடித்தபோதிலும் திட்டமிட்டபடி தென்னாபிரிக்காவில் நேற்றுக் கருத்துக்கணிப்பு ஆரம்பமானது.

பொலிஸாரும், துருப்புக்களும் கறுப்பு இனத்தவர் வசிக்கும் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

1990 ஆம் வருடம் ஜனாதிபதி தொடக்கியிருந்த சீர்திருத்தங்களின் எதிர்காலம் இக் கருத்துக் கணிப்பிலேயே தங்கியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பெரும்பான்மையாக உள்ள கறுப்பு இனத்தவர்களுக்கு முதல் முறையாக வாக்குரிமை வழங்க வழிகோலும் வகையிலான அரசியல் சாசனம் தொடர்பான பேச்சுக்கள் ஏற்கனவே தொடங்கிவிட்டன.

இப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்துவதற்குப் புதிய அரசியல் சாசனத்துக்கான ஆதரவான வாக்கைப் பெறவேண்டியது அவசியமாயிற்று.

பாதகமான வாக்குகள் கிடைத்தால் மீண்டும் பொருளாதாரத் தடைகள் விதிப்பது குறித்தும் பரிசிலனை செய்ய வேண்டியிருக்கலாம் எனக் கூறியுள்ள சர்வதேச சமூதாயம் தற்போது தென்னாபிரிக்க அரசாங்கத்துடன் சார்ந்தே உள்ளது,

இவ் வாக்களிப்புத் தோல்வியுற்றால் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியிலிருந்து தென்னாபிரிக்க அணி வெளியேறிவிடுவதன் சாத்தியக் கூறுகள் பற்றி நேற்றுப் பேச்சுவார்த்தை நிகழ இருந்தது

## 3600 அடி உயரத்தில் 400 மாடிக் கட்டிடம்

3600 அடி உயரமான ஓர் இடத்தில் 400 மாடிக் கட்டிடம் ஒன்றைக் கட்ட அமெரிக்கா திட்டம் தீட்டி, இவ்வாண்டு முற்பகுதியில் அத்திவாரக் கல்லையும் நாட்டியுள்ளது.

இது சாத்தியமாகுமா என்று மற்ற நாட்டவர்கள் வினா எழுப்புகிறார்கள், ஆனால் சாத்தியமே என்கிறார்கள் அமெரிக்காவில் உள்ள கட்டிடப் பொறியியலாளர்கள். (16)

## வெசர்நாய்க்கடி தடுப்பூசி மருந்து இவ்வார இறுதியில வந்து சேரும்

விசர்நாய்க்கடி தடுப்பூசி மருந்து (ஏ. ஆர். வி.) இவ்வார இறுதியில் யாழ்ப்பாணம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு சென்ற யாழ். பிரதேச சுகாதாரபணிப்பாளரால் இம்மருந்து எடுத்துவரப்படுவதாகவும், தடுப்பூசிமருந்து வந்ததும் யாழ் மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கு அவை உடன் அனுப்பி வைக்கப்படும் எனவும் யாழ். பிரதேச சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (47)

## ஏவுகணைத் தொழில் நுட்பத்தை இஸ்ரேல் சீனாவுக்கு விற்றது?

பேட்ரியாட் விமான எதிர்ப்பு ஏவுகணைத்தொழில் நுட்பம் தொடர்பான இரகசியங்களை இஸ்ரேல் சீனாவுக்குக் கொடுத்திருக்கலாம் என்ற தகவல் பற்றி அமெரிக்கா ஆராய்ந்துவருகிறது.

இஸ்ரேல் இதை மறுத்துள்ளபோதிலும், தகவல் உண்மையாக இருந்தால் அமெரிக்க-இஸ்ரேல் ஒப்பந்தங்களை அது மீறுவதாக அமையுமென புஷ் நிர்வாகத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்,

இந்த விடயத்தில் உண்மையில்லையென இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் மோஷே ஆரென்ஸ கூறினார்.

## கல்விப் பணிப்பாளரின் அனுமதியின்றி ஆசிரிய இடமாற்றம் செய்யத் தடை!

யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரமின்றி எதுவித ஆசிரிய இடமாற்றங்களையும் கோட்டங்களுக்குள் செய்யக்கூடாது என யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் சகல கோட்டக் கல்வி அதிகாரிகளையும் பணித்துள்ளார்

கோட்டக்கல்வி அதிகாரிகள் மிக அவசியம் என செய்ய உத்தேசித்துள்ள இடமாற்றங்களைக்கூட தமது அங்கீகாரத்துக்கு அனுப்பி அனுமதி பெற்ற பின்னரே நடைமுறைப்படுத்துமாறும் அவர் பணித்துள்ளார், (15)

### நீரிழிவு நோயாளர் அவதி

யாழ், வைத்தியசாலையில் கிளினிக்கில் சலரோக நோயாளர்களுக்கு மிக முக்கியமாகப் பாவிக்கப்படும் மருந்துக் குளிகைகளை றஸ்தினான், டயனியல் போன்றன கடந்த மாதம் முடிவடைந்துள்ளதனால் குறிப்பிட்ட நோயாளர்கள் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

தனியார் கடைகளில் இக் குளிகைகள் அதிக விலையில் விற்கப்படுகிறதென்றும் கூறப்படுகிறது.

## தென்னாபிரிக்க அதிபருடன் மண்டேலா பேச்சு நடத்துவார்

தென்னாபிரிக்காவில் அதிகரித்துவரும் வன்முறை குறித்துத்தான் அதிபர் கிளார்க்குடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக ஆபிரிக்கத் தேசிய முன்னணித் தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலா கூறியுள்ளார்,

இது இவ்வாறு இருக்க, அங்கு பல நகரங்களிலும் வெள்ளையரல்லாத மேலும் சிலர் கொல்லப்பட்டுள்ளதாகவும் அறிக்கைகள்கூறுகின்றன.

## கொர்பிக்கு பேராசிரியர் பதவி வழங்க பிரான்ஸ் விருப்பம்!

பிரான்ஸின் மிகக்கௌரவம் வாய்ந்தஆராய்ச்சி போதனை நிறுவனமான 'கொலே ஜ பிரான்ஸ்' முன்னாள் சோவியத் தலைவர் கொர்பச்சேவுக்கு பேராசிரியர் பதவி ஒன்றை வழங்க முன்வந்துள்ளது.

இது தற்போது பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக் கல்லூரியின் 52 பேராசிரியர்களும் பிரெஞ்சு ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகிறார்கள் ஒவ்வொரு துறையிலும் நாட்டின் அதிசிறந்தவர்களே இங்கு பேராசிரியர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

### பண்ணிசைப் போட்டி

1992ஆம் ஆண்டிற்கான யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் பண்ணிசைப் போட்டி இன்று காலை 8-30 மணிக்கு மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

## ஜெயலலிதாவுக்குக் கிடைக்கும் பட்டங்கள் வெறும் 'பட்டங்களே' கலவிமான்கள் கருத்து

முதல்வர் ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்டுள்ள, வழங்கப்படவுள்ள டாக்டர் பட்டங்கள் காற்றில பறக்கும் வெறும் 'பட்டங்களே' என்று தமிழகக் கல்விமான்கள் கூறியுள்ளதாக பாரிசில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

டாக்டர் பட்டத்தைப் பெறுவதற்கு ஜெயலலிதா சாதித்ததுதான் என்ன? எனவும் அவர்கள் வினா எழுப்பியுள்ளதாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஜெயலலிதாவுக்கு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகமொன்றும் டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது.

இது பற்றிக் குறிப்பிட்டுள்ள அப்பத்திரிகை கால்நடைப் பல்கலைக்கழகமொன்று டாக்டர் பட்டம் வழங்கியுள்ளமை இதுவே முதற்தடவை எனவும் குறிப்பிட்டுள்ளது. (22)

## ரஷ்ய காமன்வெல்த் அமைப்புக்கு எதிராக

# மாஸ்கோவில் நேற்று எதிர்ப்புப்பேரணி

சுதந்திர நாடுகள் காமன்வெல்த் அமைக்கப்பட்டது செல்லுபடியாகாது என்று அறிவிக்கும் ஒரு முயற்சியில் முன்னாள் சோவியத் யூனியன் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மாஸ்கோவில் நேற்று ஈடுபட்டதாக அறிவிக்கப்படுகின்றது

இவர்கள் இதற்கான முயற்சியிலீடுபட்டிருந்த தருணத்தில் ரஷ்யாவிலும், மாஸ்கோவிலும் கம்யூனிஸ்ட்டுக்கள் பேரணியொன்றை நடாத்தினர். மீண்டும் கம்யூனிசத்துடன் கூடிய சோவியத்தே வேண்டுமெனவும் பேரணியில் வலியுறுத்தப்பட்டது

சென்ற ஆண்டு இதே காலப் பகுதியிலேயே முன்னாள் சோவியத்தில் கருத்துக் கணிப்பு நடைபெற்றிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

★ தெரிவுக்குழு உறுப்பினர் தர்மதேவ சொல்கிறார்

# தொண்டாவின் யோசனைகளை அரசு ஏற்றதாகக் கருதக் கூடாது

இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ள யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு விட்டதாக எவரும் கருதக் கூடாது என இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் ஓர் அங்கத்தவரும், கேகாலை மாவட்ட உறுப்பினருமான தர்மதேவ கூறியுள்ளார்.

கேகாலையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் அவர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

பிரச்சினைத் தீர்வுக்குத் தமிழ் மக்கள் சார்பாகவே அமைச்சர் தொண்டமான் தனது யோசனையை முன்வைத்துள்ளாரே தவிர அதை அரசு ஏற்க வேண்டுமென்ற நியதியும்கிடையாது. அவ்வாறு அவர் கூறவுமில்லை எனவும் தர்மதேவ அங்கு கூறினார்,

தெரிவுக்குழுவின் அறிக்கை அடுத்தமாதம் வெளியிடப்படவுள்ள இவ் வேளையில் தெரிவுக்குழு அங்கத்தவரான இவரின் இந்தக் கூற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அவதானிகளால் கருதப்படுகின்றது.

## வீடுகளில் பணியாளர்களாக 2000 சிறுவர்கள்!

இலங்கையில் 2000 சிறுவர்கள் வீடுகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளதாக கணிப்பொன்று தெரிவிக்கின்றது.

இவர்களில் பலர் தினமும் துன்புறுத்தப்படுகின்றனர் ஒரு சிலர் மரணமடைந்துள்ளனர். இவ்வாறு சிறுவர் நல பராமரிப்பு திணைக்களம் தெரிவிக்கிறது. (22)

## 'சூழல் ஆரோக்கியம் வாழ்வின் அத்திவாரம்'

'சூழல் ஆரோக்கியம் உங்கள் வாழ்க்கையின் அத்திவாரம்' என்ற தலைப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

எம் தேசத்தின் பாசமிக்க மக்களே.

சுற்றாடல் கழிவுகளை அகற்றி ஒழிப்போம்! எமது அழிவை வருமுன் தடுப்போம்! சுயநலம் விடுத்து பொது நலம் காப்போம்! அரச மருந்தகங்களில் மருந்துகள் இல்லை! நோய்த்தாக்கங்களில் இருந்து எம்மக்களை மீட்டு எடுப்போம்,

உங்கள் இல்லங்களில், அலுவலகங்களில் உள்ளாகவும் முன்பாகவும் வீதிகளின் இருமருங்குகளிலும் உள்ள வளர்ந்த பற்றைகளையும், குப்பைகளையும் அழியுங்கள் வேண்டுமானால் புதையுங்கள்.

தயவு செய்து 25 03 1992 இற்குள் உங்கள் இல்லங்களின் முன்பாக வீதியோரங்களில் அழிக்க முடியாத கழிவுகளை வீதி ஓரமாக குவித்து வைத்திருந்து அவற்றை அகற்றுவதற்கு ஒத்துழைப்பும் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்

### ஊரடங்கால் இறக்கும் வேலை பாதிப்பு

வடமராட்சியில்இராணுவம் உத்தியோக பூர்வமற்ற ஊரடங்கு சட்டம் அறிவித்திருப்பதால் பருத்தித்துறை துறைமுகத்தில் கோமாரி கம்பனிப் பொருட்கள் இறக்கும் வேலை நேற்று பாதிக்கப்பட்டுள்ளது,

# பூநகரியில் லொறிகள் விவரம் தெளிவின்றி இருப்பதாக தகவல்

பூநகரியில் இராணுவத்திடம் சிக்கியிருக்கும் லொறிகளின் விவரம் தெளிவற்று இருப்பதாக லொறி உரிமையாளர் சங்கம் நேற்று யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகரை சந்தித்து கூறியுள்ளனர்.

பூநகரியில் 68 லொறிகள் இராணுவத்திடம் சிக்குண்டு இருப்பதாகவும் ஆனால் தம்மிடம் 8 லொறிகளின் விவரமே இருப்பதாக மேற்படி சங்கத்தினர் கூறினர்,

இதனால் லொறிகளின் முழு விவரப் பட்டியலையும் தெளிவான விவரத்துடன் உடனடியாக தெரிவித்தாலே இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் என்று யாழ் அரச அதிபர் லொறி உரிமையாளர்களுக்கு எடுத்து கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 47

## பி. பி. ஸிக்கு பாதிக்கப்பட்டவர் தகவல்

# திருமலை திரும்பிய அகதிகள் மீது முஸ்லிம் காடையர் தாக்குதல்

இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து திரும்பிய இந்திய அகதிகளுக்கு இதுவரை 500 ரூபா உதவிப் பணமும், சில கிலோ சீனியும், பருப்புமே வழங்கப்பட்டுள்ளன,

இத்தகவலை திருமலை திரும்பிய ஒருவர் பி. பி. ஸிக்கு தெரிவித்தார். அரசு உதவி புரிந்தாலும் உதவி கிடைக்கவிடாது அதிகாரிகள் தடைசெய்வதாகவும் அவர் குறிப்பிட்டார்,

திருமலையில் அகதிகள் முகாமில் தங்கியுள்ள தங்களுக்கு பாதுகாப்பில்லை எனவும் முஸ்லிம் காடையர்கள் அடிக்கடி முகாமினுள் நுழைந்து தாக்குகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கிராம சேவையாளரும், சிற்றூரவைத் தலைவரும் உணவு நிவாரணத்தில் மோசடி

இளவாலையைச் சேர்ந்த சிற்றூரவைத் தலைவரான சுவாம்பிள்ளை வில்விறெட், ஜே/153 கிராமசேவையாளரான சபாபதி நாராயணன் ஆகிய இருவரும் மக்களின் நிவாரணத்தில் மோசடி செய்தமை விடுதலைப் புலிகளின் குற்றத் தடுப்பும் பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

22 நிவாரண அட்டைகளை இக்கிராமசேவையாளர் மீளாய்வு செய்ய கையளிக்கவில்லை எனவும், இவற்றுக்கான பொருட்களான 62. 2 கிலோ அரிசி, 32 கிலோ மா என்பன சிற்றூரவைத் தலைவரின் வீட்டில் இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கிராமசேவையாளர் நாராயணனுக்கு மாதாந்தம் 3000 ரூபாவுடன் சில பொருள்களையும், 2 அந்தர் வெங்காயத்தையும் வில்விறெட் வழங்கி வந்ததும் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது

### காங்கேசன் சென்ற உணவு லொறியில் யந்திரக்கோளாறு

நேற்றுக்காலை காங்கேசன் துறை உணவுக்களஞ்சியத்திற்கு உணவுப் பொருள்களை ஏற்றச் சென்ற 10 லொறிகளில் ஒரு லொறி இயந்திரக்கோளாறு காரணமாக வெறுமனையே மற்ற லொறியால் கட்டி இழுக்கப்பட்டு யாழ்ப்பாணம் திரும்பியது

மிகுதி 9 லொறிகளில் ஒரு லொறியில் சீனியும் ஏனைய 8 லொறிகளில் அரிசியும் மாவும் எடுத்துவரப்பட்டதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கவட்டாரம் தெரிவித்தது 47

# திருமலை வந்த அகதிகளின் வீடுகளைக் காணவில்லை

அண்மையில் இந்தியாவிலிருந்து திரும்பிய திருமலை அகதிகள் திருமலையில் உள்ள தமது வீடுகளுக்கு சென்றபோது வீடுகள் இருந்த இடத்தையே காணவில்லையாம்.

இத்தகவலை வெளியிட்ட பி. பி. ஸி, வடக்கு கிழக்கில் இந்தியாவிருந்து திரும்பிய அகதிகள் தங்கியுள்ள முகாம்களுக்கு சென்ற ஐ. நா வின் அகதிகள் அமைப்பு இச்சம்பவங்கள் குறித்து விவரங்களை சேகரித்துள்ளதாக குறிப்பிட்டது.

அகதிகள் குறித்து திரட்டப்பட்ட விவரங்கள் சில தினங்களில் ஜெனிவாவிலி உள்ள ஐ. நா. அகதிகள் அமைப்பின் தலைமையகத்திற்கு அனுப்பப்படும் எனவும் பி. பி. ஸி, குறிப்பிட்டது.

# புத்தூர் அகதிகள் கெற்பேலியில் குடியமர்த்த நடவடிக்கை

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர்பிரிவிலுள்ள புத்தூர் அகதிமுகாம் கொட்டகையில் இருந்த 46 குடும்பங்கள் அக்கொட்டகை எரிந்ததையடுத்து தற்பொழுது புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாசாலையில் தங்கியுள்ளனர்.

இப்பாடசாலையில் உள்ள இந்த அகதிகள் கெற்பேலியில் குடியேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகவும் விரைவில் அங்கு குடியேற்றப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது' 06

# சீநோர் நிறுவன ஊழியருக்கு விசேட உணவு முத்திரை

சீநோர் நிறுவனத்தில் பணிபுரிந்து தற்போது தொழில் இழந்துள்ள ஊழியர்களுக்கு விசேட உணவு முத்திரைகளை வழங்க யாழ் அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது குறித்து வறுமை நிவாரண ஆணையாளருடன் அரசாங்க அதிபர் தொடர்பு கொண்டதையடுத்து அனுமதி கிடைத்துள்ளது,

இந்த ஊழியர்களில் உணவு முத்திரைகளைப் பெறத்தகுதியுடையவர்களின் விவரங்களை தெரிவுசெய்து அனுப்பி வைக்குமாறு சமூக சேவைப் பிரதிப் பணிப்பாளர் உதவி அரச அதிபர்களைக் கேட்டுள்ளார்.

சுமார் 150 குடும்பங்கள் இதன்படி உணவு முத்திரைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. 25

# இந்தியாவிலிருந்து அகதிகள் இன்று தலைமன்னார் வருவர்

தமிழகத்திலிருந்து ஆயிரத்து ஐம்பத்திநான்கு தமிழ் அகதிகள் நேற்று திருகோணமலைக்கு கப்பல் மூலம் வந்தனர்.

இன்று மேலும் 500 அகதிகள் தலைமன்னாருக்கு கப்பலில் வரவுள்ளனர்.

இந்தியாவில் இருந்து நாடு திரும்பும் அகதிகளின் மதிப்பீடுகளை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய ஜெனிவாக் குழு தயாரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கை திரும்பிய அகதிகளில் நான்கில் ஒரு பகுதியினர் தொடர்ந்தும் அகதி முகாம்களிலேயே தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

### இன்றைய ஆட்டங்கள்

உலகக்கோப்பைக்கான கிரிக்கெட்போட்டியில் இன்று நியூஸிலாந்தில் நடைபெறும் போட்டியில் நியூஸிலாந்தை எதிர்த்து பாகிஸ்தான் அணி மோதுகிறது,

அவுஸ்திரேலியாவில் நடைபெறும் இரு போட்டிகளில் இங்கிலாந்து எதிர் சிம்பாவே அவுஸ்திரேலியா எதிர் மேற்கிந்தியதீவுகள் அணிகள் மோதுகின்றது,

# நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் விவாதம்

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சி எம்பிக்களுக்கும் அரசதரப்பு எம்பிக்களுக்கும் இடையில் வாக்குவாதங்கள் இடம்பெற்றன.

ஏயர்லங்கா விவகாரத்தைத் தவிர ஏனைய விடயங்களைப் பற்றிப் பேசக்கூடாது என ஆளுங்கட்சி எம்பிக்கள் எதிர்க்கட்சி எம்பிக்களிடம் தெரிவித்தபோது வாக்குவாதங்கள் ஏற்பட்டன,

பாராளுமன்றம் நாளை மீண்டும் கூடுகிறது,

# உடுகம்பொலவின் செயல் பற்றி ஜே. வி. பி. தலைவர் அறிக்கை

ஜே. ஆரின் சர்வாதிகார ஆட்சியில் பல இளைஞர்கள் கொல்லப்பட்டு டயர் போட்டு எரிக்கப்பட்டனர் இவையெல்லாம் ஜே. ஆரின் பணிப்பின் பேரில் உடுகம்பொலவால் செய்யப்பட்டன

இவ்வாறு ஜே. வி. பியின் தற்போதைய தலைவர் சோமவன்ஸ அமரசிங்க லண்டனிலிருந்து நவயுகய என்ற பிரசுரத்தில் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்

ஜே. ஆரின் இத்துரோகச் செயலுக்கு அவரது மகன் ரவி அத்துலத்முதலி, காமினி திஸநாயக்கா ஆகியோரும் உதவி புரிந்தனர்

இதேபோல 1989இல் உடுகம்பொலவின் அட்டூழியங்களுக்கு ஜனாதிபதி பிரேமதாஸவும், முன்னாள் அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னவும் பதில் சொல்லவேண்டும்

உடுகம்பொலவின் சகோதரரான மேஜர் உடுகம்பொல வெளிநாட்டிலிருந்து தங்கம் கடத்தி வந்தபோது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பிடிபட்டார்,

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 06

### மாலிசந்திக்கருகில் ஷெல்

திங்கட்கிழமை வடமராட்சியில் ஏவப்பட்ட ஷெல்களில் ஒன்று அல்வாய் தெற்கு மாலிசந்திக்கருகில் வீழ்ந்து வெடித்தது. 14

### பிக்குவிற்கு றிமாண்ட்

கதிர்காமம் கதிரமலை ஸ்ரீ சித்தாந்த தேரோவை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்க மாத்தளை நீதவான் உத்தரவிட்டார்.

ஜே. வி. பி, சந்தேக நபர்கள் மூவரை பாதுகாத்து வைத்திருந்ததாகவும், ஆயுதங்கள் வைத்திருந்ததாகவும் இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது

### மீனவர்கள் விடுதலை

பாலைதீவுக் கடலில் கடந்த வெள்ளிக்கிழமை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட குருநகர் மீனவர்களான அ. இராசக்கோன் (42) ஞா கொலிசன் (15) செல்லையா (40) ஆகிய மூவரும் நேற்றுமுன்தினம் குருநகரை வந்தடைந்தனர்.

இவர்களை கடற்படையினர் பிடித்துச்சென்று தாக்கி இவர்களது வலைகளை கடலில் வீசியபின்னர் விடுவித்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது 15

# சென்னை விமான சேவைக்கு பெல்ஜியத்தில் இருந்து விமானம்

சென்னையில் ஜனவரி 10இல் விபத்துக்குள்ளான எயர் லங்கா விமானத்துக்கு பதிலாக சேவையிலிருந்த போயிங் 737-300 என்ற விமானத்தை பெல்ஜியம் கம்பனி ஒன்றிடமிருந்து எயர் லங்கா நிறுவனம் வாடகைக்கு பெறவுள்ளது.

தற்போது விமானப்படையின் அவ்ரோ எச். எஸ். 748 விமானம் சென்னை கட்டுநாயக்கா சேவையில் ஈடுபடுத்தப்படுகிறது,

இதேபோல மற்றொரு விமானம் ஒன்றும் பெல்ஜியத்தில் இருந்து தருவிக்கப்படவுள்ளது.

★ பாராளுமன்றத்தில் தினேஷ்

# விமானம் வாங்கும்போது பலருக்கு கமிஷன் வருகிறது

எயர் லங்காவுக்கு விமானங்கள் வாங்கும்போது சிலருக்கு நல்ல கமிஷன் கிடைக்கிறது என்று மக்கள் ஐக்கிய முன்னணி எம். பி. தினேஷ் குணவர்த்தனா நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்,

இந்நேரம் குறுக்கிட்ட ராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்கா "உங்கள் தகப்பனார் பிலிப் குணவர்த்தனா அமைச்சராக இருந்தபோது கமிஷன் பெறவில்லையா" என்று கேட்டார்.

அதற்கு பதிலளித்த தினேஷ் குணவர்த்தனா எனது தகப்பனார் பிலிப் குணவர்த்தனா இறக்கும் போது கடனாளியாகவே இறந்தார் என்பதை நாடறியும் ஆனால் உங்களில் பலர் இறக்கும் போது கோடீஸ்வரர்களாகவே இறக்கின்றனர் என்றார்,

### எயர்லங்காவில் தகுதியற்றவர்

அடிப்படைத் தகுதியில்லாதவர்கள் பலர் எயர்லங்கா நிறுவனத்தில் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்று சபையில் சுதந்திரக்கட்சி எம். பி சிறிபால டி சில்வா நேற்றுக்கூறினர்.

அரசின் உறவினர்களே இங்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

### பலாலியிலிருந்து...

பெடுக்கச் சென்ற வேளையில் நேற்று முன்தினம் இரவு 8மணிக்கு விழுந்து வெடித்த ஷெல்லினால் இரத்தினேஸ்வரி (40) என்ற பெண் ஸ்தலத்திலேயே பலியானார்

இவருடன் வீட்டில் நின்ற மகள் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார், (08)


# அறிவித்தல்

ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான

போட்டிப் பரீட்சை - 1992

11-03-1992 இல் பிரசுரமான கிராம உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 24-03-92 நண்பகல் 11 மணிக்கு முன்னர் எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைப்பதற்காக நீடிக்கப்பட்டுள்ளது,

அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணம்

03035


இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷேர்ஸ (பிறைவேற்) லிமிற்றெட் திருவனத்தினரால் யாழ்கலிலவகாடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 18-03-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது